**செய்தி வெளியீடு எண் : 072** **நாள் : 11.01.2023**

## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## அயலகத் தமிழர்கள் தினம்

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் 2023 ஆம் ஆண்டிற்கான அயலகத் தமிழர் தின நிகழ்ச்சிகளில், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் "அயலகத்தமிழர்கள் – தமிழ் கற்றல் & கற்பித்தல்" என்ற அமர்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி N.V.N. சோமு, அவர்கள் தலைமையுரையாற்றினார். இதன் தொடர்ச்சியாக, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இயக்குநர் **முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தைப் பற்றிய விளக்கவுரையாற்றினார்.**

அதனைத் தொடர்ந்து, **அயலக மாணவர்களுக்கான தமிழ்க் கற்றல் கற்பித்தலில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் பங்கைப்** பற்றி, அந்நிறுவனத்தின் இணை இயக்குநர் முனைவர் சங்கர சரவணன், அவர்கள் விளக்கவுரையாற்றினார். **மேலும் அயலகத் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பித்தல்** பற்றி, கலி ஃபோர்னியாவைச் சேர்ந்த உலகத் தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் திருமதி. வெற்றி செல்வி இராசமாணிக்கம் அவர்களும், **மாணவர்களுக்கான பண்பாடு தொடர்பான கருத்துப் பரிமாற்றம்** குறித்து, துபாய் தமிழ்ச் சங்கத்தின் தலைவர், முனைவர் ஸ்ரீரோகிணி அவர்களும், **அயலக மாணவர்களுக்கான தமிழ் கற்பிக்கும் முறைகள்** குறித்து, ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த தமிழ் வளர்ச்சி மன்றத்தின் தலைவர், முனைவர் சந்திரிகா சுப்ரமணியன் அவர்களும், **தமிழ் கற்றல் கற்பித்தலுக்கான வசதிகள்** குறித்து, ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த முன்சென் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர், திரு. நிர்மல்ராமன் கண்ணையன், அவர்களும், **அயலக மாணவர்களுக்கான தமிழ்க் கல்வியின் தேவை** குறித்து, அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்தின், ஆலோசனைக் குழு உறுப்பினர் முனைவர் அரசு செல்லையா அவர்களும், **தமிழ்க் கற்றல் கற்பித்தலில் மதிப்பீட்டு முறைகள்** (Assessment Standards) குறித்து காணொலி வாயிலாக MNTS தமிழ்ப்பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சிவானந்த மாரியப்பன் அவர்களும் எடுத்துரைத்தனர். மேலும் பெங்களூரு தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த திருமதி கார்த்தியாயினி அவர்களும், மலேசியா நாட்டைச் சேர்ந்த திருமதி ராதிகா அவர்களுக்கும் இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினர்.

இந்நிகழ்வில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் தொடர்பு மையத்தின் நிர்வாகிகள், தமிழ்ச் சங்கங்களின் பிரதிநிதிகள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**